www.Padasalai.Net www.TrbTnpsc.com

V

# மாதத் தேர்வு - ஆகஸ்ட் 2019

## ஏழாம் வகுப்பு

## அறிவியல்

Reg.No. 

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 30

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 1 x 6 = 6

1. அடர்த்தியின் SI அலகு

   a) கிகி/மீ$^2$ b) கிகி/மீ$^3$ c) கிகி/மீ d) கி/மீ$^3$

2. ஒளி ஆண்டு என்பது எதன் அலகு?

   a) தொலைவு b) நேரம்
   c) அடர்த்தி d) நீளம் மற்றும் நேரம்

3. அறை வெப்பநிலையில் திரவமாக உள்ள உலோகம்

   a) குளோரின் b) சல்பர் c) பாதரசம் d) வெள்ளி

4. மகரந்தச் சேர்க்கையாளர்கள் என்பவை

   a) காற்று b) நீர் c) பூச்சிகள் d) மேற்கூறிய அனைத்தும்

5. தூக்கம் உடலுக்கு மட்டுமல்ல, இதற்கும் நல்லதுதான்.

   a) மகிழ்ச்சி b) ஓய்வு c) மனம் d) சுற்றுச்சூழல்

6. கூம்பு வடிவ வேருக்கு எடுத்துக்காட்டு

   a) வெங்காயம் b) பீட்ரூட் c) கேரட் d) தக்காளி

### பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** 7 x 2 = 14

7. i) தங்கத்தின் அடர்த்தி எவ்வளவு?

   ii) பரப்பு : மீ$^2$ : கனஅளவு : _______.

8. ஓர் ஒளி ஆண்டு என்றால் என்ன?

9. பொருத்துக:

| I | | II |
|---|---|---|
| i) பரப்பு | a) | ஒளி ஆண்டு |
| ii) தொலைவு | b) | மீ$^3$ |
| iii) அடர்த்தி | c) | மீ$^2$ |
| iv) கனஅளவு | d) | கி.கி. |
| | e) | கி.கி./மீ$^3$ |

10. மூலக்கூறு - வரையறு.

11. சேர்மங்கள் என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் கொடுக்கவும்.

12. கந்தக அமிலத்தின் ($H_2SO_4$) அணுக்கட்டு எண்ணைக் கணக்கிடுக.

13. மகரந்தச்சேர்க்கை - வரையறு.

14. பற்றுக்கம்பிகள் என்றால் என்ன?

15. i) மலரின் ஆண் இனப்பெருக்க உறுப்பு _______

    ii) வெங்காம் மற்றும் பூண்டு _______ வகைக்கு எடுத்துக்காட்டாகும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. கீழ்க்கண்டவற்றில் தவறை சரிசெய்து எழுதுக:
    i) சின்னம்மை லுகோடெர்மா என்றும் அழைக்கப்படுகிறது.
    ii) முதல் நிலை தீக்காயத்தில் முழுத்தோல் பகுதியும் சேதமடைகிறது.
17. பின்வருவனவற்றிலிருந்து சரியானதை தேர்வு செய்க.
    உறுதிப்படுத்துதல் (A): வாய் சுகாதாரம் நன்றாக உள்ளது.
    காரணம் (R) : நல்ல பற்கள் மற்றும் ஆரோக்கியமான திசுக்களால் சூழப்பட்ட ஈறுகள்
    a) A மற்றும் R இரண்டும் சரி
    b) A மற்றும் R இரண்டும் தவறு
    c) A சரி ஆனால் R தவறானவை
    d) A தவறு ஆனால் R சரி
18. முதலுதவியின் தேவையைக் கூறுக.

## பகுதி - III

**III. ஒவ்வொரு பிரிவிலும் கண்டிப்பாக ஒரு வினாவிற்கு விடையளிக்க வேண்டும்:**

2 x 5 = 10

### பிரிவு - அ

19. ஒரு கல்லின் அடர்த்தியை ஒரு அளவிடும் முகவை மூலம் எவ்வாறு கண்டறிவாய்?

*(அல்லது)*

20. தனிமங்கள் மற்றும் சேர்மங்கள் - வேறுபடுத்துக.

### பிரிவு - ஆ

21. தரைகீழ்த் தண்டின் வகைகளை விவரி.

*(அல்லது)*

22. ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு எவ்வாறு நோய் பரவுகிறது?

******